## கடந்தகால ‘திராவிட மாடல்’ அரசின் சாதனைத் திட்டங்களை

# மக்களிடம் கொண்டு செல்ல ஆர்வம் காட்டாத பள்ளிக் கல்வித்துறை!

## திருப்பூரில் அரசுப் பள்ளிகளில் மாணவ, மாணவியர்கள் சேர்க்கை மந்தம்!

திருப்பூர், மே 23-

கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெற்ற கடந்த கால திராவிட மாடல் அரசின் சாதனை திட்டங்களை மக்களிடம் கொண்டு செல்ல ஆர்வம் காட்டாத பள்ளிக்கல்வித்துறையால் திருப்பூரில் அரசு பள்ளிகளில் மாணவ, மாணவியர்கள் சேர்க்கையில் மந்த நிலை ஏற்பட்டுள்ளது.

திருப்பூர் மாவட்டத்தில் 2026-27ம் கல்வி ஆண்டிற்கான அரசு பள்ளி மாணவ, மாணவியர் சேர்க்கை நடவடிவக்கைகளில் கல்வித்துறை போதிய ஆர்வம் காட்டவில்லை என்றும், இதனால் சேர்க்கை மந்தமாகும் சூழல் நிலவுவதாகவும் சமூக ஆர்வலர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெற்ற கடந்த கால திராவிட மாடல் ஆட்சியில் அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை அதிகரிக்க பல்வேறு அதிரடி முன்னேற் பாடுகள் செய்யப்பட்டன. குறிப்பாக, அரசு சார்பில் மாணவர்களுக்கு வழங்கப்படும் விலையில்லா பாடநூல்கள், நோட்டு புத்தகங்கள் சீருடைகள் மற்றும் சைக்கிள் வழங்கும் திட்டங்கள் குறித்தும், உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் புதுமைப்பெண் திட்டம் மற்றும் மாணவர்களுக்கான தமிழ் புதல்வன் திட்டம் குறித்தும் விரிவான விழிப்புணர்வு ஏற்படுத்தப் பட்டது.

மேலும், அரசு பள்ளி மாணவ, மாணவியர்களின் உயர்கல்வி கனவை நனவாக்கும் நான் முதல்வன் திட்டம், தமிழ் வழியில் கல்வி பயின்ற மாணவ, மாணவியர்களுக்கான 20 சதவீத இட ஒதுக்கீடு, அரசு பள்ளி மாணவ, மாணவியர்களுக்கான 7.5 சதவீத மருத்துவக்கல்வி இட ஒதுக்கீடு மற்றும் மாணவர்களின் சிந்தனையை தூண்டும் அறிவியல் சுற்றுலா உள்ளிட்ட வரலாற்று சிறப்புமிக்க திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு பேனர்கள் அரசு பள்ளிகளின் முன்பாக பிரம்மாண்டமாக வைக்கப்பட்டன. இந்த திட்டங்களால் ஈர்க்கப்பட்டு தனியார் பள்ளிகளுக்கு நிகராக பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை அரசு பள்ளிகளில் சேர்க்க ஆர்வம் காட்டினர். இதனால், கடந்த ஆண்டுகளில் திருப்பூர் மாவட்டத்தில் மாணவ, மாணவியர்கள் சேர்க்கை கணிசமாக உயர்ந்தது. ஆனால், நடப்பு 2026 27ம் கல்வி ஆண்டு தொடங்குவதற்கு இன்னும் சில வாரங்களே உள்ள நிலையில், திருப்பூரில் உள்ள பெரும்பாலான அரசு பள்ளிகளில் மாணவ, மாணவிகள் சேர்க்கையை அதிகரிப்பதற்கான எந்தவித

விழிப்புணர்வு பேனர்களோ அல்லது முறையானமுன்னேற்பாடுகளோ இதுவரை செய்யப்படவில்லை. கல்வித்துறையும், பள்ளி நிர்வாகங்களும் மாணவர் சேர்க்கையை தீவிரப்படுத்துவதில் போதிய ஆர்வம் காட்டாத நிலை நீடிக்கிறது. மார்ச் 1ம் தேதி அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கை தொடங்கிய நிலையில், இரண்டு மாதங்களாக திருப்பூர் மாவட்டம் முழுவதும் உள்ள 14 ஒன்றியங்களிலும் சேர்த்து இதுவரை வெறும் 3,500 முதல் 3,700 வரையிலான மாணவ, மாணவியர்கள் மட்டுமே அரசு பள்ளிகளில் சேர்ந்துள்ளனர். அரசு பள்ளிகளின் உள் கட்டமைப்பு மற்றும் தமிழக அரசின் கல்வி நலத்திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்த்து, மாணவ, மாணவியர்கள் சேர்க்கையை உடனடியாக தீவிரப்படுத்த மாவட்ட நிர்வாகமும், கல்வித்துறையும் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சட்டமன்றத் தொகுதி - கள ஆய்வு!

தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர் கூட்டத்தில் அறிவித்ததற்கிணங்க, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின்படி, தென்காசி தெற்கு மாவட்டம், தென்காசி, கடையநல்லூர் தொகுதிகளில் ‘கள ஆய்வுக் குழு’ ச.முரசொலி எம்.பி., சேலம் உமாராணி ஆகியோர் கீழ்க்காணும் விவரப்படி ஆய்வு செய்கின்றனர்.

1.6.2026 - தென்காசி சட்டமன்றத் தொகுதி - டிரிஸ்லில் எலைட் மஹால் - இலஞ்சி.

2.6.2026 - கடைய நல்லூர் சட்டமன்றத் தொகுதி - எஸ்.எஸ்.கிராண்ட் மஹால் - அச்சம்பட்டி - கடையநல்லூர்

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 22.05.2026

**தலைமைக் கழகம்,**
**தி.மு.க.**

# சட்டமன்றத்தொகுதி-களஆய்வு!

கழகத் தலைவர் ஆணைக்கிணங்க காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் அறிவிப்பின்படி காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் சட்டமன்றத் தொகுதி “கள ஆய்வுக் குழு” திருமதி ஹெலன் டேவிட்சன் (முன்னாள் எம்.பி.) தலைமைச் செயற்குழு உறுப்பினர் இளமகிழன் ஆகியோர் அடங்கிய குழு வரும் 25 ஆம் தேதி முதல் சட்டமன்றத் தொகுதிகளில் கீழ்க்காணும் விவரப்படி சட்டமன்றத் தேர்தல் குறித்த கள ஆய்வு மேற்கொள்ளவிருக்கிறது.

| தொகுதி | நாள் | இடம் |
|---|---|---|
| செய்யூர் | 25.5.2026<br>திங்கட்கிழமை | சுபம் கன்வென்ஷன்<br>நெல்வாய்பாளையம் |
| மதுராந்தகம் | 26.5.2026<br>செவ்வாய்க்கிழமை | மாநகர கழக அலுவலகம்<br>மதுராந்தகம் |
| உத்திரமேரூர் | 27.5.2026<br>புதன் கிழமை | வார் ரூம்<br>உத்திரமேரூர் |
| காஞ்சிபுரம் | 28.5.2026<br>வியாழக்கிழமை | கலைஞர் பவள விழா<br>மாளிகை, காஞ்சிபுரம் |

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 21.5.2026

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு

# மாநில நிர்வாகிகள் - மாவட்ட அமைப்பாளர்கள் கூட்டம்!

### ஆதிதிராவிடர் நலக்குழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி அறிவிப்பு!

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட அமைப்பாளர்கள் கூட்டம், வருகிற 25-5-2026 திங்கட்கிழமை காலை 11.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில். எனது தலைமையில், ஆதிதிராவிடர் நலக்குழுத் தலைவர் மருதூர் ஏ.இராமலிங்கம் - துணைத்தலைவர் மா.மதிவேந்தன் ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர்கள் விழுப்புரம் புஷ்பராஜ், வி.பி.இராஜன், திப்பம்பட்டி ஆறுச்சாமி - துணைச் செயலாளர்கள் பெரம்பலூர் பா.துரைசாமி, மு.பொன்தோஸ், மு.பரமானந்தம், சி. தசரதன், சா.இராசேந்திரன், மாரியப்பன் கென்னடி, தருமபுரி கொ.ரமேஷ், மதுரை ந.சிவக்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட அமைப்பாளர் மட்டும் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

பொருள் : 1. ஜூன் 3- முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள்.
2. கழக ஆக்கப்பணிகள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 21.05.2026

**ஆ. கிருஷ்ணசாமி,**
செயலாளர்
தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு



தருமபுரி மேற்கு மாவட்டம் செட்டிக்கரையில் தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் பொதுமக்கள் மற்றும் கழகத்தினரை நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தார். உடன் ஒன்றியச் செயலாளர்கள் பிரபு ராஜசேகரன், மாது, சக்திவேல் வர்த்தகர் அணி முனுசாமி மற்றும் கழகத்தினர் உள்ளனர்.



கழக துணைப் பொதுச்செயலாளர், முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ் அவர்களின் தாயார் உடல்நிலை சரியில்லாமல் இருப்பதை அறிந்து நேரில் சென்று நலம் விசாரித்தார். உடன் நகர செயலாளர் இரா.சக்கரை, ஒன்றிய செயலாளர் பி.வி.ஆர்.சு.விசுவநாதன், நகர இளைஞர் அணி அமைப்பாளர் செ.மணிகண்டன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## நிலத்தை அதிகாரிகள் அளவீடு செய்யாததால் – கிருஷ்ணகிரி

# மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தீக்குளித்த மாற்றுத் திறனாளி சாவு!

### மாஜிஸ்திரேட்டிடம் மரண வாக்குமூலம்; உடலை வாங்க மறுத்து சேலம் மாவட்ட ஆட்சியர் ஆபீஸ் முன்பு உறவினர்கள் தர்ணா!

சேலம், மே 23-

கிருஷ்ணகிரியில் நிலத்தை அதிகாரிகள் அளவீடு செய்யாததால் கலெக்டர் அலுவலகத்தில் தீக்குளித்த மாற்றுத்திறனாளி, சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். அவரது உடலை வாங்க மறுத்து சேலம் கலெக்டர் அலுவலகம் முன் உறவினர்கள் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி தாலுகா தியாகரசனப்பள்ளி அருகே மாதரசனப்பள்ளி கிராமத்தைச் சேர்ந்தவர் வெங்கடேஷ் (45), மாற்றுத்திறனாளி.

விவசாயியான இவர், கடந்த திங்கட்கிழமை கிருஷ்ணகிரி கலெக்டர் அலுவலகத்திற்கு வந்து, நிலபிரச்சினைக்கு உரிய முறையில் அளவீடு செய்து தராத அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, கோஷமிட்டவாறு உடலில் பெட்ரோல் ஊற்றி தீக்குளித்தார். இதில் பலத்த காயமடைந்த வெங்கடேசை, பாதுகாப்பு பணியில் இருந்த போலீசார் மீட்டு, கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர். பின்னர், மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்த்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி வெங்கடேஷ் உயிரிழந்தார்.

இதுபற்றி கிருஷ்ணகிரி தாலுகா போலீசார், வழக்குப்பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர். நேற்று முன்தினம் காலை, வெங்கடேசின் உடலை பிரேதப் பரிசோதனை செய்வதற்கான ஏற்பாடுகளை போலீசார் செய்து, அவரது குடும்பத்தாரிடம் பேசினர். அப்போது, வெங்கடேசின் மனைவி திம்மக்கா, மகள்கள் ஷர்மிளா, சங்கீதா, மகன் சதீஷ் மற்றும் உறவினர்கள், வெங்கடேஷ் சாவுக்கு நீதி கிடைக்கும் வரை உடலை வாங்க மாட்டோம் எனக்கூறினர்.

தொடர்ந்து மனைவி, மகள்கள் மற்றும் உறவினர்கள் 15க்கும் மேற்பட்டோர், சேலம் கலெக்டர் அலுவலகத்திற்கு வந்து, அதிகாரிகளிடம் புகார் மனு கொடுத்தனர். பின்னர், கலெக்டர் அலுவலக நுழைவாயில் தரையில் அமர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர். வெங்கடேசின் மகள் ஷர்மிளா நிருபர்களிடம் கூறியதாவது: எனது தந்தைக்கு சொந்தமான நிலத்தை அளவீடு செய்து தரக்கோரி, அதிகாரிகளிடம் 2 முறை மனு அளித்த போதும், உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.

பிறகு அளவீடு செய்வது போல், நிலத்தில் வந்து நின்று விட்டு, திரும்பி சென்று விட்டார்கள். 3வது முறையாக அரசு அதிகாரிகளை சந்தித்து முறையிட்டார். அங்கு என்ன நடந்தது எனத்தெரியவில்லை. அதன்பிறகு எனது தந்தை கடும் மனஉளைச்சலுக்கு ஆளாகி வேதனையில் இருந்தார். திங்கட்கிழமையன்று கிருஷ்ணகிரி கலெக்டர் அலுவலகத்துக்கு சென்று தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டுள்ளார். தற்போது அந்த நிலத்தை அளவீடு செய்து முடித்து விட்டதாகவும், அதற்கான ஆவணங்கள் இருப்பதாகவும் அதிகாரிகள் கூறுகின்றனர்.

அந்த ஆவணத்தில், எனது தந்தை கையெழுத்து போட்டிருப்பதாக கூறுகின்றனர். எனது தந்தைக்கு எழுத, படிக்க தெரியாது. அவர் கையெழுத்து போடமாட்டார். அவர் கைரேகை மட்டுமே வைப்பார். அந்த ஆவணங்கள் அனைத்தும் போலியானவை. அதனால், தந்தை வெங்கடேஷ் சாவுக்கு காரணமான அதிகாரிகள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கும் வரை உடலை பெற்றுக்கொள்ள மாட்டோம். இவ்வாறு அவர் கூறினார்.

இதையடுத்து தர்ணாவில் ஈடுபட்டவர்களிடம் சேலம் டவுன் போலீசாரும், கிருஷ்ணகிரி தாலுகா இன்ஸ்பெக்டர் மணிமாறனும் பேச்சுவார்த்தை நடத்தினர். வெங்கடேஷ் இறப்பதற்கு முன்பு மாஜிஸ்திரேட்டிடம் மரண வாக்குமூலம் அளித்துள்ளார். அதனால் அவர், யார் மீதெல்லாம் புகார் தெரிவித்து இருக்கிறாரோ அவர்கள் மீது கட்டாயம் நடவடிக்கை எடுப்போம் என்று உறுதி கூறினர். அதை ஏற்று வெங்கடேசின் உறவினர்கள், தர்ணா போராட்டத்தை கைவிட்டனர்.

# சட்டமன்றத் தொகுதி - கள ஆய்வு!

விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அறிவிப்பின்படி வழக்கறிஞர் ரவீந்திரன் மற்றும் மாநில மாணவர் அணி அமைப்பாளர் திருமதி. ஜெ.வீரமணி ஆகியோர் கீழ்க்கண்டவாறு கள ஆய்வு மேற்கொள்கின்றனர்.

**செஞ்சி சட்டமன்ற தொகுதி- நாள்-24.05.2026 ஞாயிற்றுக்கிழமை**

| ஒன்றியம்/பேரூர் | நேரம் | இடம் |
|---|---|---|
| செஞ்சி கிழக்கு ஒன்றியம் | காலை 10.00 மணி | வள்ளி அண்ணாமலை திருமண மண்டபம் , செஞ்சி |
| செஞ்சி மேற்கு ஒன்றியம் | | |
| செஞ்சி மத்திய ஒன்றியம் | | |
| மேல்மலையனூர் கிழக்கு ஒன்றியம் | | |
| மேல்மலையனூர் மேற்கு ஒன்றியம் | | |
| மேல்மலையனூர் மத்திய ஒன்றியம் | | |
| செஞ்சி பேரூர் | | |
| அனந்தபுரம் பேரூர் | | |

**மயிலம் சட்டமன்ற தொகுதி- நாள்-25.05.2026 திங்கட்கிழமை**

| ஒன்றியம் | நேரம் | இடம் |
|---|---|---|
| வல்லம் வடக்கு ஒன்றியம் | காலை 10.00 மணி | R.R மஹால் (A/C) தீவனூர் |
| வல்லம் தெற்கு ஒன்றியம் | | |
| வல்லம் மத்திய ஒன்றியம் | | |
| மயிலம் வடக்கு ஒன்றியம் | | |
| மயிலம் தெற்கு ஒன்றியம் | | |
| மயிலம் மத்திய ஒன்றியம் | | |
| ஒலக்கூர் மேற்கு ஒன்றியம் | | |

**திண்டிவனம் சட்டமன்ற தொகுதி- நாள்-26.05.2026 செவ்வாய்கிழமை**

| நகரம்/ஒன்றியம்/பேரூர் | நேரம் | இடம் |
|---|---|---|
| ஒலக்கூர் கிழக்கு ஒன்றியம் | காலை 10.00 மணி | சங்கமித்ரா திருமண மண்டபம் திண்டிவனம் |
| மரக்காணம் கிழக்கு ஒன்றியம் | | |
| மரக்காணம் மேற்கு ஒன்றியம் | | |
| மரக்காணம் மத்திய ஒன்றியம் | | |
| திண்டிவனம் நகரம் | | |
| மரக்காணம் பேரூர் | | |

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18

**தலைமைக் கழகம்**
தி.மு.க.